அழகிய கலைநயம் மிக்க
புதுமையான
22 KT
தங்க நகைகளை
ஆடர் செய்து
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி: 23628

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

பெண்மைக்கு மெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி: 23628

சுடர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு கார்த்திகை மீ 10 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியுல் அவ் பிறை 23 (26-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:-317

## தமிழர் பகுதிகளை இணைக்கும்

# இந்திய யோசனைக்கும் இலங்கை இணங்கவில்லை

கொழும்பு, நவம்பர் 26

வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்ப் பகுதிகளை இணைத்துக் கொடுக்கலாம் என்ற இந்திய அரசின் புதிய யோசனைக்கு இலங்கை இணக்கம் தெரிவிக்கவில்லை.

கடந்த திங்கள் கொழும்பு வந்த இந்திய இணை அமைச்சர் குழு, இந்த யோசனையை முன்வைத்தே ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடத்தியதாக தகவலறிந்த வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் மொழிவாரி அமைப்பு ஒன்று தான் தமிழர் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் என்று தமிழர் அமைப்புக்கள் வலியுறுத்தி வருகின்றன.

இலங்கை அரசோ இணைப்பை எதிர்க்கிறது கிழக்குமாகாணத்தில் இனவாரியாக மூன்று மாகாண சபைகளை அமைக்கும் திட்டத்தை இலங்கை அரசு பெங்களூர்ப் பேச்சுக்களில் முன் வைத்தது.

இதனை ஏற்க தமிழீழ விடுதலைப் புலிகள் மறுத்து விட்டனர்.

இந்த நிலையில் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பு வந்த இந்திய அமைச்சர் குழு, வடக்குடன் கிழக்கில் உள்ள தமிழர் பகுதிகளை இணைத்து தமிழர் மாகாணம் அமைக்கும் புதிய யோசனையை முன் வைத்து ஜனாதிபதியுடனும் மற்றும் அமைச்சர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீதிவிட்டு வீதி பாயும் ஷெல் குண்டுகள்!

யாழ்ப்பாணம், நவ. 26

அண்மைக்காலமாக யாழ் கோட்டை முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் மணிக்கூண்டுக் கோபுரத்தடியிலும், முனீஸ்வரன் ஒழுங்கையிலுமே பெரும்பாலும் விழுந்து வெடித்தது.

பின்னர் ஒருபடியாக முன்னேறி ஆஸ்பத்திரி வீதியிலும் சத்திரத்துச் சந்தியிலும் விழுந்து வெடித்து பல உயிர்களைப் பலி கொண்டன.

கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் மின்சாரநிலைய வீதியிலும், பஸ் நிலையம் அருகாமையிலும் விழுந்து வெடித்தது. மீண்டும் பல உயிர்களைப் பலிகொண்டன.

நேற்றைய ஷெல் குண்டுகள் ஸ்ரான்லிவீதி வரை பாய்ந்தன. (இ-10)

## ஷெல் தாக்குதலை நிறுத்த உதவுங்கள்

### யாழ்நகர வர்த்தகர்கள் இந்திய தூதருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ். நகரில் ஏவப்படும் ஷெல் தாக்குதலை நிறுத்த வகை செய்யுமாறு யாழ்ப்பாணம் வர்த்தகர்கள் சங்கம் இந்தியத் தூதுவருக்குக் கடிதம் அனுப்பி உள்ளது.

கடித விவரம் வருமாறு;

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமில் இருந்து யாழ் நகரை நோக்கி அன்றாடம் பாரிய மோட்டோர் ஷெல்கள் ஏவப்படுவதால் நகரில் உள்ள பல இலட்சக் கணக்கான ரூபா பெறுமதியான பொருள்களைக் கொண்ட வியா

(4ஆம் பக்கம் பார்க்க)

## 2 நாள் இடைவெளிக்குப் பின் நகரில் மீண்டும் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 26

இரண்டு நாள் இடைவெளிக்குப் பின் நேற்று மீண்டும் யாழ் நகரில் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன

இதன்காரணமாக ஆறு பேர் காயமடைந்துள்ளனர். இரண்டு கடைகள் சேதமடைந்தன

நேற்றுக் காலை 9 மணி அளவில் நகர் வழமைக்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் கோட்டையில் இருந்து திடீர் என ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

பொதுமக்கள் சிதறி ஓடிக் கொண்டிருந்த வேளையில் யாழ் பஸ் நிலையத்திற்கு முன்பாக ஆஸ்பத்திரி

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

26-11-1986

புதன்கிழமை

சுபநேரம்:

4.42 முதல் 6.12 வரை

ராகுகாலம்:

12.12 முதல் 1.42 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

நவமி காலை 6.55 வரை

### காயம் அடைந்தோர்

யாழ்ப்பாணம், நவ. 26

நேற்று யாழ் நகரில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களில் காயமடைந்தோர் விவரம்:-

மாரிமுத்து அருமைத்துரை (33 வயது) கொழும்புத்துறை டாக்சி

(4ஆம் பக்கம் பார்க்க)

### கடைகள் இடம் மாறுகின்றன

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ் கோட்டையில் இருந்து மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல்கள் காரணமாக பஸ் நிலையப் பகுதியில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் சில ஸ்ரான்லி வீதிக்கு மாற்றப்படுகின்றன.

தற்பொழுது ஸ்ரான்லி வீதியில் பலசரக்குக் கடைகளும் செயற்படத் தொடங்கியுள்ளன.

(இ-10)

## புலிகளின் பெரும் தாக்குதலில்

# முள்ளிப்பொத்தானை மினி முகாம் நிர்மூலம்

### ஆயுதங்கள், வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணம், நவ. 26

திருமலை மாவட்டத்தில் உள்ள முள்ளிப்பொத்தானையில் உள்ள மினி இராணுவமுகாம் மீது திங்கட்கிழமை இரவு புலிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். தாக்குதலின் போது முகாமில் இருந்து சிப்பாய்களும், ஊர்காவல் படையினரும் பின்வாங்கினர். புலிகளால் பெரும் தொகையான ஆயுதங்களும் வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை வருமாறு:-

திருகோணமலை மாவட்டத்தில் பாரம்பரியமாக தமிழர்கள், வாழ்ந்து வந்த கிராமங்களில் ஸ்ரீலங்கா அரசு பல சிங்களக் குடியேற்றங்களை

(4 ஆம் பக்கம்பார்க்க)

## அடுத்த சில தினங்களில் கொழும்பில் குண்டுகள் வெடிக்கும் என்கிறார் அத்துலத்

கொழும்பு, நவ. 26

கொழும்பில் அடுத்த சில தினங்களில் தீவிரவாதிகள் குண்டுகளை வெடிக்க வைக்கக் கூடும். பொதுமக்கள் இது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இப்படி தேசிய பாதுகாப் அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு விவாதத்துக்கு பதில் அளித்துப் பேசுகையில் அமைச்சர் அத்துலத்முதலி மேலும் சொன்னதாவது:

இஸ்ரேலிய இராணுவ ஆலோசகர்கள் நாட்டில் இருப்பதாகக் கூறப்படுவது தவறு. அப்படி ஒருவரும் நாட்டில் இல்லை. நாட்டின் ஒருமைப்பாடு, இறைமை பாதுகாக்கப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் ஆஸ்பத்திரி பாதுகாப்புக்கு

### அமைச்சர் உத்தரவாதம்

யாழ்ப்பாணம், நவ. 26

நெருக்கடியான காலக்கட்டத்திலும் யாழ் வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்பு தொடர்ந்து நடைபெறுவதற்கு இயன்ற உதவிகளை வழங்குவேன்.

யாழ் வைத்திய பணிப்பாளருக்கு மகளிர் போதனா வைத்திய சாலை அமைச்சர் சுனேத்திரா ரணசிங்க அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இவ்வாறுதெரிவித்துள்ளார்.

நெருக்கடியான காலக்கட்டத்திலும் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையை திறம்பட இயங்க வைத்துக்கொண்டிருக்கும் தங்களுக்கும் தங்கள் ஊழியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நோயாளர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் சிறந்த சேவைகளையும் நான் பாராட்டுகிறேன்.

நோயாளர்கள் பராமரிப்பு தொடர்ந்து நடைபெறுவதற்கு வைத்தியசாலையின் பாதுகாப்புக்கு என்னால் ஆனவற்றைச் செய்வேன்.

இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ-10)

## வளலாயில் கனன் சார்ஜ்

யாழ்ப்பாணம், நவ. 26

நடந்து வந்த சிப்பாய்கள் மீது வளலாய் பாம் பீச் ஹோட்டலுக்கு முன்வைத்து கனன் சார்ஜ்தாக்குதலை தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்தினர்.

இதில் 4 சிப்பாய்கள் உயிரிழந்திருக்கலாம் என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலை 4-30 மணி அளவில் பலாலியில் இருந்து தொண்டமானாறு நோக்கி இராணுவ வாகனத்தொடர் ஒன்று சென்றுகொண்டு இருந்தது.

வாகனங்களின் பின்னால் நடந்து வந்த சிப்பாய்கள்மீதுதான் கனன் சார்ஜ் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதற்குப் பின்னர் ஹெலிக் கொப்டர்கள், சீ பிளேன் ஆகியன அந்த இடத்தை வட்டமிட்டன. (இ-எ)

## பேச்சுகள் தொடரும்

### காணி, சட்டம், ஒழுங்கு அம்சங்களில் முன்னேற்றம்

கொழும்பு, நவ. 26

இனப்பிரச்சினை சம்பந்தமாக இலங்கை, இந்தியத் தலைவர்களுக்கு இடையேயான பேச்சுக்கள் மீண்டும் தொடர உள்ளன இதற்காக இந்திய இணை அமைச்சர் குழு மீண்டும் புதுடில்லியில் இருந்து கொழும்புக்கு வரலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இணக்கம் காணப்படாத வடக்குடன் கிழக்குத் தமிழ்ப்பகுதிகளை இணைக்கும் விஷயம் குறித்தே இனி நடைபெறப் போகும் பேச்சுக்களில் முக்கியத்துவம் வழங்கப்பட இருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த திங்கள் இரவு 4 மணித்தியாலங்கள் வரை இணை அமைச்சர் குழுவுக்கும் ஜனாதிபதி தலைமையிலான குழுவுக்கும் இடையே பேச்சுக்கள் நடைபெற்றன அப்போது சட்டம்-ஒழுங்கு, காணி, ஆளுநர் அதிகாரங்கள் பற்றி சில முன்னேற்றங்கள் காணப்பட்டன.

யுத்தநிறுத்தம் ஒன்றின் அவசியம் பற்றி பேச்சுக்களின்போது வலியுறுத்தப்பட்டது.

இப்படி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ரஷ்யத் தலைவர் கோர்பச்சேவ்வின் இந்திய விஜயம் முடிந்த பின்னரே இனப்பிரச்சினையின் அடுத்தக் கட்டப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். (அ-எ)

### ★ பிரபா லலித் பிறந்த தினம்

யாழ்ப்பாணம், நவ. 26

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனின் 32 ஆவது பிறந்த தினம் இன்று ஆகும்,

இதேவேளை ஸ்ரீலங்கா தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் பிறந்த தினமும் இன்றேயாகும்.

லலித்துக்கு இன்று 50வயது பூர்த்தியாகிறது. (இ-10)

### முச்சந்தி முனி



அப்ப, படிப்படியா முன்னேறி யாழ்ப்பாண நகரத்தைக் கைப்பற்ற யோசனை போடத்தான் லலித் இரண்டுநாளைக்கு முன்னுக்கு வடக்கை எம். பி. மாரோடை வந்தவரோ... பின்னை...

## முஸ்லிம் பகுதிகள் ஒன்றுகஇணைக்கப்பட்டே முஸ்லிம் மாகாணசபை

### பதியுத்தீன் மஹ்மூத் கூறுகிறார்

கொழும்பு, நவ.26

கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் மக்கள் வாழுகின்ற பகுதிகள் ஒன்றுக இணைக்கப்பட்டே முஸ்லிம் மாகாண சபை அமைய வேண்டும்.

இப்படி முன்னாள் அமைச்சரும் இலங்கை முஸ்லிம் கவுன்ஸில் தலைவருமான அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அறிவித்திருக்கிறார்.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறையை முஸ்லிம் மாகாணசபையாக மாற்றும் திட்டத்தை முழுமூச்சுடன் தான் எதிர்ப்பதாக அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் தெரிவித்திருக்கிறார்.

அம்பாறை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றம் தொடர்ந்து நடக்கிறது.

இம்மாவட்டத்தில் 80 சதவீதமான காணிகள் சிங்களவரின் கைகளுக்குப் போய்விட்டன.

முஸ்லிம்களிடம் 1·5 சதவீதமான காணிகளே உள்ளன. 5 சதவீதமான காணிகள் தமிழரிடம் உள்ளன.

இந்த நிலையில் அம்பாறை மாகாண சபை பெயரளவில்தான் முஸ்லிம்களுக்கு இருக்கும். நிர்வாகம் சிங்களவர்களிடம் இருக்கும்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் வாழும்

(4ஆம் பக்கம் பார்க்க)

### விஜிதரன் விவகாரம்:

## மதகுருமார் முயற்சி தொடர்கிறது

யாழ்ப்பாணம், நவ 26

விஜிதரன் விவகாரம் விபரீத விளைவுகளை ஏற்படுத்தாவண்ணம் கிறிஸ்தவ மதகுருமார் தொடர்ந்தும் முயற்சித்து வருகிறார்கள்

முதலில் புரிந்துணர்வின் அடிப்படையில் யாழ் பிராந்திய புலிகளின் தளபதி கிட்டுவை உண்ணாவிரதிகளுடன் சந்திக்க வைத்தனர்.

அதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு பல்கலைக்கழக மாணவர் அவையினருடன் மதகுருமார் சந்திப்பொன்றை நடத்தினர்.

அச் சந்திப்பில், தங்களின் வற்புறுத்தலுக்கு இணங்கி உண்ணாவிரதத்திலிருந்து கௌரவமாக விலகிக்கொள்ளுமாறு மாணவர்களை மனிதாபிமான ரீதியில் கேட்டுக்கொண்டனர்.

மாணவரின் பாதுகாப்பு சம்பந்தமாக இயக்கங்களிடம் உத்தரவாத உறுதிமொழி பெற்றுத்தருவதாகவும் அவர்கள் உறுதி அளித்தனர்.

இதற்கு மாணவர் அவையினர் பதிலளிக்கை

(4ஆம் பக்கம் பார்க்க)

## சுகவீனமுற்ற மாணவி உண்ணாவிரதத்திலிருந்து இடைநிறுத்தம்

### பதிலாக மற்றொரு மாணவி

யாழ்ப்பாணம், நவ 26

யாழ் பல்கலைக்கழகத்தில் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்த அறுவரில் ஒருவரான மாணவி உண்ணாவிரதப் போராட்டத்திலிருந்து இடை நிறுத்தப்பட்டார்

இவருக்குப் பதிலாக வேறு ஒரு மாணவி சாகும்வரை உண்ணாவிரதத்தை நேற்றுமுதல் மேற்கொண்டுள்ளார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த கோகிலேஸ்வரி நேற்று முன்தினம் மயக்கமுற்றதைத் தொடர்ந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் அங்கே அவருக்கு ஏற்கனவே குடல் புண்

(4ஆம் பக்கம் பார்க்க)

### வெகுஜன ஸ்தாபனங்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ, 26

சகல வெகுஜன ஸ்தாபனங்களின் கூட்டம் ஒன்றை யாழ் பல்கலைக்கழக மாணவர் அமைப்புக் குழு இன்று பிற்பகல் 2 மணிக்கு கூட்டுகிறது. (இ)

வங்கி அலுவலக இடமாற்றம்
வரையறுக்கப்பட்ட
ஹட்டன் தேசிய வங்கி
யாழ்ப்பாணக் கிளை

மேற்படி வங்கியின் அலுவல்கள் யாவும் 25-11-1986 செவ்வாய்க்கிழமை முதல் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு ஸ்ரான்லி வீதி, இல. 54 இல் அமைந்துள்ள (ஆரியகுளம் சந்தியிலிருந்து சுமார் 150 யார் தொலைவில், ஸ்ரீதர் சினிமாவுக்கு அண்மையில்) தற்காலிக அலுவலகத்தில் நடைபெறும்.

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தற்போதைய அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. வாடிக்கையாளர் அனைவரும் புதிய அலுவலகத்திற்கு வருமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

தற்காலிக தொலைபேசி இல. 23175

— முகாமையாளர்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில் உயிரிழந்தவர்களின்

# சடலங்களைக் கொடுக்க படையினர் மறுப்பு!

மட்டக்களப்பு, நவ. 26

மட்டக்களப்பு, கூழாவடியில் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த மூவரின் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்க ஆயுதப்படையினர் மறுத்து விட்டனர்.

உரிய சாட்சிகளுடன் இணைப்பதிகாரியிடம் சென்று சடலங்களை ஒப்படைக்கும்படி மட்டக்களப்பு பிரசைகள் குழுச் செயலாளர் சாம் தம்பிமுத்து விடுத்த வேண்டுகோளை, படையினர் ஏற்க மறுத்தனர்.

இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளுக்கு குழுச் செயலாளர் திரு. சாம் தம்பிமுத்து முறையிட்டிருக்கின்றார்.

கல்லடியில் ஆயுதப் படை முகாமில் இறந்தவர்களின் சடலங்கள் மீது பிரேத பரிசோதனை நடைபெற்றது.

சட்ட வைத்திய அதிகாரி திரு. பஞ்சலிங்கம் வைத்திய பரிசோதனை நடத்தினர். (உ-எ-21)

## ஜப்பானிய லயன்ஸ் அன்பளிப்புகள் அகதிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன

காங்கேசன்துறை நவ 26

ஜப்பானிய லயன்ஸ் கழகத்தால் அகதிகளுக்காக வழங்கப்பட்ட புடைவை வகைகளை மாவை லயன்ஸ் கழகம் அகதிகளுக்கு வழங்கியுள்ளது.

ஜப்பானிய லயன்ஸ் கழகம் வழங்கிய உடுபுடவைப் பார்சல்களில் 200 பார்சல்கள் யாழ் மாவட்டத்திற்கு வழங்கப்பட்டு அவை இங்குள்ள லயன்ஸ் கழகங்கள் மூலம் அகதிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

மாவை லயன்ஸ் கழகத்திற்கு கிடைத்த பார்சல்களை வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, தாளையடி பகுதிகளைச் சேர்ந்த 300 அகதிகளுக்கும், மல்லாகம், மயிலிட்டி பகுதிகளைச் சேர்ந்த 41 அகதிகளுக்கும், வேலணை பகுதியைச் சேர்ந்த 16 அகதிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மாவை லயன்ஸ் கழக தலைவர் பி. ஜே. அந்தோனிப்பிள்ளை, லயன் எஸ். ஸ்ரீபதி, லயன் ராஜு, என். வீரசிங்கம், லயன் வே. குமாரசுந்தரம், லயன் மு. பொன்னம்பலம் ஆகியோர் இவற்றை கையளித்தனர். (இ - 68)

## மாயமாய் மறைந்து திரும்பி வந்த சூரன் தலைகள்

பருத்தித்துறை, நவ. 26

தென் புலோலியூர் உபய கதிர்காம ஆலய வாகனசாலைக்குள் பெட்டகத்தில் பூட்டிவைக்கப்பட்ட சூரன் தலைகள் மாயமாக மறைந்து பின்னர் மீண்டும் மாயமாக அதே இடத்துக்கு வந்துள்ளன.

அப்பகுதி இளைஞர்கள் கந்தசஷ்டி தினத்தின் இறுதி நாளன்று சூரன் போருக்கென வாகன சாலைக்குள் சென்று பெட்டகத்தைத் திறந்து பார்த்தபோது சூரன் தலைகள் அங்கு இல்லாதமையைக் கண்டு அதிர்ச்சியும் ஆச்சரியமுமடைந்தார்கள்.

இதுபற்றி தென் புலோலியூர் உபய கதிர்காம ஆலய தருமபரிபாலன சபைக்கு முறையிட்டனர் பின்பு கந்தசஷ்டி சூரன் போருக்கு வேறு கோயிலில் இருந்து சூரன் தலைகளை இரவலாகப் பெற்று உற்சவத்தை நடத்தி முடித்தனர்.

அதன் பின்னர் கார்த்திகைத் திருவிழாவிற்கு வாகன சாலைக்குள் அவ்வூர் இளைஞர்கள் சென்று பெட்டகத்தைச் திறந்து பார்த்தபொழுது அவர்களை அதிசயத்தில் ஆழ்த்தும் வகையில் சூரன் தலைகள் அங்கு இருந்தன.

இவை என்ன மாதிரி மறைந்து திரும்பின என்பது அவ்வூர் மக்களுக்குப் பெரிதும் புரியாத புதிராகவேயுள்ளது.

இவ்வாலயம் பழம் பெருமை வாய்ந்த வரலாற்றுப் புகழ் மிக்கது. அதனால் மக்கள் இதுவும் ஓர் அதிசயமோவெனப் பேசிக்கொள்கிறார்கள். (உ-118)

முல்லைத்தீவு வரும்

## திருமலை அகதிகள் எண்ணிக்கை அதிகரிப்பு

முள்ளியவளை, நவ. 26

இம்மாத ஆரம்பம் முதல் திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவுக்கு வரும் அகதிகள் எண்ணிக்கை மீண்டும் கூடிக் கொண்டு வருகிறது

மழை காலம் ஆரம்பித்து விட்டதால் இப் பகுதிக்கு வரும் அகதிகள் தங்குவதற்கு வசதியாக சங்குமிடம், குடிசைகள் அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது.

கிடுகு தட்டுப்பாடாக இருப்பதால் அவர்களுக்கு இருப்பிட வசதிகளைத் தேடிக் கொடுப்பதில் முல்லைத்தீவு பிரசைகள் குழு சிக்கலை எதிர் நோக்கியுள்ளது.

இதேவேளை அகதிகளுக்குப் புனர் வாழ்வு அளிப்பதற்கென ''சற்றடே ரிவியூ'' ஸ்தாபனம் ரூபா பத்தாயிரம் முல்லைத்தீவுப் பிரசைகள் குழுவுக்கு அனுப்பியுள்ளதாக பிரசைகள் குழுப் பேச்சாளர் ஒருவர் கூறினர். (உ-93)


## பிரயாண ஒழுங்குகள்

✶ சவூதி அரேபியா ✶ சிங்கப்பூர் ✶ லண்டன் ✶ ஜேர்மனி

சவூதி அரேபியாவுக்கு தொழில் வாய்ப்புடன் (வருமானத்துடன்) (Open Visa)வில் செல்ல விரும்புவோரை யாம் ஒவ்வொரு வியாழக்கிழமையும் அனுப்பிக்கொண்டிருக்கிறோம். விரும்புவோர் உடனடியாக கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும். (வயது 25 — 35 இடைப்பட்ட ஆண்கள் மட்டும்)

சிங்கப்பூர்: வருமான வாய்ப்புடன் செல்ல விரும்பும் பெண்கள் இவ்வாரத்தில் உடனடியாக கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (20 வெற்றிடங்கள் மட்டும் உண்டு இவ்வாரத்தில் மட்டும்) (1) பாஸ்போட் (2) முழு அளவிலான கலர்ப்படம் ஒன்று 6 படங்கள் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

வருமான வாய்ப்புடன் செல்லவிரும்பும் ஆண்களும் (வயது 21 - 35) உடனடியாக கீழ்க்காணும் முகவரியில் பின்வரும் சான்றுகளுடன் தொடர்பு கொள்ளவும். (1) பாஸ்போட் (2) 6 படங்கள் (3) தொழில் அனுபவ சான்றிதழ்.

லண்டன், ஜேர்மனி செல்வோரை எமது முகவர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் கூட்டிச் செல்வார். உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

மு. கு. எமது யாழ் அலுவலகம் சீரற்ற கால நிலைமை காரணமாக மூடப்பட்டிருப்பின் எமது கிளை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

பிரதான அலுவலகம்:
Tri Star Travels
ரை ஸ்ரார் றவல்ஸ்,
No 6, நவீன சந்தை,
(மேல்மாடி)
யாழ்ப்பாணம். 23813

கிளை அலுவலகம்;
71, குருசோ வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

வே. குகராசா
மயிலியற்புலம் கந்தசாமி கோவிலடி,
அராலி வடக்கு.


## யாழ் மாவட்டத்துக்கு வருடம் 54 ஆயிரம் மெட்றிக்தொன் விறகுதேவை

காங்கேசன்துறை, நவ 26

யாழ் மாவட்டத்திற்கு வருடம் 54 ஆயிரம் மெட்றிக் தொன் விறகு தேவைப்படுகிறது. ஆகவே நாம் விறகுக்காக, மரங்களை வெட்டும்போது மரங்களை நடவும் மறக்கக்கூடாது.

மாவை லயன்ஸ் கழகம் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் இளவாலை மக்கள் நலன்புரி சங்க ஆதரவுடன் நடத்திய விவசாயக் கருத்தரங்கில் உரையாற்றிய விவசாய உத்தியோகத்தர் திரு குமாரவேல் இவ்வாறு கூறினர்.

லயன். பி. ஜே. அந்தோனிப்பிள்ளை தலைமையில் நடந்த இக் கருத்தரங்கில் விவசாய தலைமைப் பீட உத்தியோகத்தர் திரு. இரகுபதி பேசுகையில், விவசாயிகள் தொழில் நுட்ப அறிவைப் பெருக்கினால் விவசாயம் மேலும் விருத்தியடையுமெனவும், இந்த அறிவை வழங்க விவசாயத் திணைக்களம் பல வழிகளிலும் உதவுமெனவும் குறிப்பிட்டார்.

மற்றும் திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி திரு. குகதாசன், மக்கள் நலன்புரிச் சங்கத் தலைவர் திரு. இராசரத்தினம், மெய்கண்டான் வித்தியாலய அதிபர். திரு. எஸ். செல்லத்துரை உட்பட பலர் பேசினர். (இ - 68)

## புங்குடுதீவில் சுகாதார வாரம்

புங்குடுதீவு, நவ. 26

சுகாதாரத் திணைக்களமும் கல்வித் திணைக்களமும் இணைந்து நடத்திய சுகாதார வார நிகழ்ச்சிகள் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன.

பாடசாலை மாணவ மாணவிகள் மத்தியில் பேச்சுப்போட்டி, சித்திரப்போட்டி, கட்டுரைப் போட்டி, பாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டன.

இவ்விழாவில் டாக்டர் வி. ரி. இளங்கோவன் பேசுகையில், உள்நாட்டு வளங்கள்மூலம் குறைந்த செலவில் வறிய குடும்பங்கள்கூட நல்லபோஷாக்கு உணவைப் பெற்றுக் கொள்ள முடியும் என விளக்கம் அளித்தார்.

கொத்தணி அதிபர் ஆர். எஸ். செல்வத்துரை பேசுகையில், கல்விமான்களின் சுகாதார அறிவுரைகளை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கூறினர்.

சுகாதாரப் பரிசோதகர் திரு. அ. சோதிவர்மன் பேசுகையில் வீட்டுத் தோட்டம், பசுமாடு வளர்ப்பது, கோழி வளர்ப்பு ஆகியன மூலம் இயற்கையான, பசுமையான இயற்கை உணவுகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனக் கூறினர். (இ-131)

மக்கள் முகம்

### ஊழியர் சேம நல சங்கம்

சுன்னாகம், நவ. 26

வலிகாமம் தெற்கு உதவி அரச அதிபர் பிரிவு அரச ஓய்வூதியச் சேம நலச் சங்கத்தின் புது வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: திரு. தி. மாணிக்கவாசகர், உபதலைவர்: திருவாளர்கள்: எஸ். ராசா, கே நவரத்தினம், என். திருநாவுக்கரசு.

செயலாளர்: திரு. இ. மாணிக்கவாசகர், உபசெயலர்: திரு. கே. சுப்பிரமணியம், பொருளாளர்: திரு கே. சண்முகநாதன், உதவிப் பொருளாளர்: திரு. ரி. சிவம்.

எட்டுப்பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவானது.

கணக்கு பரிசோதகராக திரு எஸ். சோமாஸ்கந்தசர்மா தெரிவானர். (இ - 27)

### இருபது பேருக்கு பயிற்சி

வேலணை, நவ 26

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பத்து இலட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ்—மேசன்— தச்சு பயிற்சி வழங்கும் திட்டத்தில் — வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருபது பேருக்கு பயிற்சியாளர்கள் விரும்பும் தொழில் ஸ்தாபனங்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சிகளில் ஆறு மாதங்களின் பின் திறமை காட்டுபவர்களுக்கு இரண்டாம் கட்டப் பயிற்சி யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் வழங்கப்படும். (உ-167)



## யூனியன் சாம்பியன்

யாழ்ப்பாணம், நவ 26

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்திய 15 வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யூனியன் கல்லூரி சாம்பியனானது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை யூனியன் கல்லூரி அணி 1-0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்தது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது.

ஆட்ட நேர இடைவேளைக்கு முன்னர் இரு அணிகளினதும் ஆட்டம் சோபிக்கவில்லை. பல கோல்களை அடிக்கும் சந்தர்ப்பங்களை இரு அணிகளுமே மாறிமாறி தவறவிட்டன.

எனினும் இடைவேளைக்குப் பின்னர் யூனியன் அணி சிறப்பாக விளையாடியது. யூனியன் அணி வீரர்களின் ஆட்டம் சிறப்பாக அமைந்தபோதும் அவர்களினால் ஒரு கோலை மட்டுமே அடிக்க முடிந்தது.

சுற்றுப் போட்டியின் மூன்றும் இடத்தைத் தெரிவு செய்வதற்கான போட்டியில் நடேஸ்வராக் கல்லூரியை ஒஸ்மானியாக் கல்லூரி 1-0 கோலால் தோற்கடித்தது

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் வெற்றி பெற்ற வீரர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களை வழங்கினர்.

போட்டிக்கான ஏற்பாடுகளை யாழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத் தலைவர் திரு. ஏ. பஞ்சலிங்கத்தின் தலைமையின் கீழ் பொதுச் செயலாளர் கப்டன் என். சோமசுந்தரம், உதைபந்தாட்டச் செயலாளர் சாகுல் ஹமீத் ஆகியோர் மேற்கொண்டனர். (உ)

### விளையாட்டு மூலம் ஒற்றுமை ஊக்கம்

விளையாட்டு கழகங்கள் பல புதிதாத உருவாக்கப்படவேண்டும். அதன்மூலம் மக்களிடையே ஒற்றுமை ஒழுக்கம் ஊக்கம் ஆகியன வளர முடியும்

தெல்லிப்பளை சித்தியம் புளியடியில் கலைச்செல்வி சனசமூக நிலையத் தலைவர் திரு ஐ தனபாலசிங்கம் புதிய விளையாட்டுக்கழகத்தை ஆரம்பித்து உரையாற்றும் பொழுது இப்படித் தெரிவித்தார். (ஒ)

### வடமராட்சியில் ஊர்வலம்

வல்வெட்டித்துறை, நவ. 26

தமிழ் போராளிகள் மீது தமிழகத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கண்டித்தும் புலிகள் தலைவர் பிரபாவின் உண்ணாவிரதத்தை ஆதரித்தும் நேற்று முன்தினம் வடமராட்சிப் பகுதியிலும் ஊர்வலம் நடத்தப்பட்டது.

உடுப்பிட்டி, பொலிகண்டி, இமையாணன், பருத்தித்துறை, புலோலி துன்னாலை போன்ற இடங்களில் இருந்து ஆரம்பித்த ஊர் வலங்கள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில், வந்து ஒன்று கூடின.

அங்கு பெரும் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. (உ-160)

## டானியலின் முகவுரைகள் நூலுருவில் வெளிவரவேண்டும்

### "என்கதை" வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், நவ. 26

பல எழுத்தாளர்களின் வெளியீடுகளுக்கு டானியல் முகவுரைகள் எழுதியுள்ளார். அம் முகவுரைகளை எல்லாம் தொகுத்து புத்தகமாக வெளியிட வேண்டும். இதன் மூலம் அவரது இலக்கிய ஆளுமை தெரிய வரும்.

இவ்வாறு பேராசிரியர் அ. சண்முகதாஸ் கூறினர்.

நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்ற மக்கள் எழுத்தாளர் கே. டானியலின் 'என் கதை' வெளியீட்டு விழாவுக்கு தலைமை வகித்து அவர் பேசினர்.

அவர் மேலும் பேசுகையில்:—

ஈழத்து தமிழ் புனைகதை இலக்கியம் வாழும் வரை டானியலும் வாழ்வார்.

எழுத்தாளர்களின் ஆக்கங்களை படிப்பதன் மூலம் அவர்களை தரிசிக்க முடிகிறது

டானியல் எழுதிய அவரது சுயசரிதையிலிருந்து; அவரது வரலாறு எப்படி இலக்கியத்திற்கு பயன்படுத்தப்பட்டது என்பது வாசகர்கள் அறிந்து கொள்ளலாம் என்றார்.

திரு. சொக்கன் தமது வெளியீட்டுரையில் வழக்கமான கதைகளில் பாத்திரங்கள்; கதாநாயக, வில்லன் பண்புகளால் மெருகூட்டப்பட்டு படைக்கப்படும்.

டானியலின் கதைகளில் உண்மையான இயற்கையான பண்புகளையுடைய யதார்த்த பூர்வமான பாத்திரங்களைக் காணலாம் என்றார்.

திரு. பொன். பொன்ராசா, திரு. கே. தங்கவடிவேல், திரு. அ. சோதிவர்மன், புலவர் ஈழத்துச் சிவானந்தன், திரு. எஸ். வன்னியகுலம், திரு. வே. சித்திவிநாயகர், ஜனாப். எம். ஏ. சி. இக்பால், திரு எஸ். திருச்செல்வம், திரு. வி. ரி. இளங்கோவன் ஆகியோரும் உரையாற்றினர்.

மறைந்த டானியலுக்காக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதோடு; தஞ்சாவூரில் நடைபெற்ற டானியலின் இறுதி ஊர்வல- அஞ்சலி நிகழ்ச்சிகள் அடங்கிய விடியோ படமும் காண்பிக்கப்பட்டது. (இ- 5)

### தேசிய சயரோக தடுப்புச் சங்க கருத்தரங்கு

சுன்னாகம், நவ. 26

தேசிய சயரோகத் தடுப்புச் சங்கத்தின் வலி- தெற்கு உதவி அரச அதிபர் பிரிவு கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறுகிறது.

உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் தேசிய சயரோக தடுப்புச் சங்கத்தின் சுகாதார கல்வி உத்தியோகத்தர் திரு. கு. நடராஜன் 'இலங்கை தேசிய சயரோகத் தடுப்பு சங்கங்களின் அமைப்பும், திட்டங்களும் செயற்பாடுகளும்' என்ற தலைப்பிலும் வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் 'சயரோகமும் மக்கள் பங்கும்' பற்றியும் கருத்துக்களை வழங்குவர். (இ-27)

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## படியும் நிலை வந்தால் படிப்பு தானாக வரும்

### பெற்றோர் தின விழாவில் உரை

யாழ்ப்பாணம், நவ. 26

படித்தல் என்பதன் பொருள் பாடங்களைப் பயில்தல் என்பது மட்டுமல்ல; படிதலும் ஆகும். மாணவரைப் படியச் செய்தலே கல்வியின் முக்கிய நோக்கம் ஆகும். படியும் நிலை மாணவருக்கு வந்து விட்டால் படிப்புத்தானே வந்து விடும்.

நல்லூர் சென்ற் பெனடிக்ற் றோமன் கத்தோலிக்கத் தமிழ் வித்தியாலயப் பெற்றோர் தின விழாவில் உரையாற்றிய சென். சம்பத்திரிசியார் கல்லூரி உப அதிபர் வண. யேசுநேசன் அடிகளார் இவ்வாறு குறிப்பிட்டார்

பெற்றோரும் ஆசிரியரும் என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றிய அடிகளார் சிந்திக்கத் தூண்டும் பல கருத்துரைகளை வழங்கினர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:—

பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் நெருங்கிய தொடர்பு அமைவதில்லை. இதனால் பிள்ளைகள் பெற்றோரைப் பற்றி ஆசிரியரிடமும் ஆசிரியர் பற்றிப் பெற்றோரிடமும் பொய் கூறித் தமது தவறுகளை மறைத்து விடுகின்றனர்.

இதனால் அவர்கள் குறைகள் நீங்க வழியில்லாது போய் விடுகிறது. அதனோடு பெற்றோரிடத்தே ஆசிரியர் மீது காழ்ப்புணர்ச்சி ஏற்படுகிறது.

மாணவரோடு சேர்ந்து பெற்றோரும் ஆசிரியர் மீது பழி கூறத் தொடங்கி விடுகின்றனர். பெற்றோர் அடிக்கடி ஆசிரியர்களைச் சந்தித்து தமது பிள்ளைகளின் ... கொள்ளவேண்டும்.

குறைபாடுகளை அறிந்து அவற்றைத் தீர்க்க முயல வேண்டும். இத்தகைய சந்திப்புகளுக்கு எவ்வித தடையுமில்லை. அவை வரவேற்கப்படுகின்றன.

மாணவர் பாடசாலைக்கு வந்தால் பாடசாலை நடைபெறும் வராவிட்டால் பாடசாலை நடைபெறாது. ஆனால் இன்று அடிக்கடி மாணவர் காலையில் பாடசாலைக்கு வெளியே கூடுகிறார்கள். என்ன என்று கேட்டால் இன்று பள்ளிக்கூடம் இருக்கிறதா என்று பார்த்துப் போக வந்தோம் என்கிறார்கள்.

பெற்றோருக்கு மாணவர் படியாமல் இருப்பதாலேயே இப்பிரச்சினைகள் எழுகின்றன. பெற்றோர் இதனை உணர்ந்து செயற்படுவதால் அதிக நன்மை விளையும்.

இப்படி அவர் கூறினர். (இ)

### மரம் நடுகை இயக்கம்

பருத்தித்துறை, புற்றளை, உபயகதிர்காமம் ஆகிய கிராமங்களில் வடமராட்சி சுற்றுடல் சூழல் பாதுகாப்பு ஸ்தாபனத்தின் உதவியுடன் கடந்த புதனன்று மர நடுகை இயக்கம் ஆரம்பமானது.

புற்றளை மகாவித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றிற்கான பயன்தரு மரங்களை பனை அபிவிருத்திச் சபைப் பணிப்பாளரும் மில்க்வைற் தொழிலதிபருமான திரு. க. கனகராஜா வழங்கினர்.

மேலும் வடமராட்சிப் பகுதியிலுள்ள கல்லூரிகளுக்கும் திருக்கோயில்களுக்கும் மலைவேம்பு, சஞ்சீவி, இப்பில் இப்பில் மற்றும் பயன்தரு மரங்களும் இலவசமாக வழங்கப்பட்டன.

இம்மரநடுகை இயக்கம் திட்டப் பணிப்பாளர் திரு. சி. த மார்க்கண்டு தலைமையில் நடைபெற்றது. இது தொடர்பான சகல நடவடிக்கைகளையும் உதவிச் செயலாளர் திரு. ஏ. என். எஸ் திருச்செல்வம் மேற்கொண்டார். (உ 118)


### ஓராண்டு நினைவஞ்சலி

எம் நினைவு அலைகள்



அமரர் திரு. ச. வேலுப்பிள்ளை
(மேற்பார்வையாளர்
தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு)

மலர்வு: 22-04-1931
உதிர்வு: 26-11-1985
திதி: 14-12-1986

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்
குறை நிரப்பும் நிறை குடமாய்
கறையற்ற காவலனாய் நிறைந்த
குத்துவிளக்கே குடும்பத்தின் காவலனே
கொடும் பாதை வீதியிலே
வீழ்ந்தனையோ பாதியிலே
ஆறாத்துயரத்தில் ஆழ்த்திவிட்டு
நீ பறந்த நாள் இன்று
அரன் பாதம் அஞ்சலித்தோம்
சேர்ந்த திருவடியில் சேர்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

வைரவர் கோயில்
கிழக்கு,
பரந்தன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

மனிதன் மனிதனாக வாழவேண்டும் இது முக்கியமாக வாழ்க்கைக்குத் தேவை. இதன் உட்கருத்து மனிதன் நல்லதையே செய்யவேண்டும்.

— காஞ்சி முனிவர்

உதயன்
உண்மை - விசுவாசம் - ஒற்றுமை

இல 15 ஐவது ஒழுங்கை மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073
26-11 1986 த.பெ இல 23

## அகிம்சை வழி தொடங்கட்டும்

கடந்த ஆறு நாட்களுக்குக் கூடுதலாக உண்ணாவிரதம் இருந்து வந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் உடல்நிலை மோசமடைந்து வருவதாக அறிவிக்கப்பட்டது. அவர்களில் ஒரு மாணவியின் தேகநிலை மிகவும் கவலைக்கு இடமாகிவிட்டது. அவர் தீவிர வைத்திய கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்.

இது மிகவும் கவலை தரும் விடயமாகும். மாணவன் விஜிதரனின் மர்ம மறைவைத் துலங்க வைத்து, அவரை மீட்பதற்காகவே யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரதம் தொடங்கப்பட்டது.

ஆனால் மாணவர்களின் இத்தனை நாள் போராட்டத்தின் பின்னரும் விஜிதரனுக்கு உண்மையில் என்ன நடந்தது என்று தெளிவாகத் தெரியவில்லை. அது குறித்து ஒரு துப்புத்தானும் வெளியாகவில்லை. வெறும் வதந்திகளும், ஊகங்களும், பக்கசார்பான பிரசாரங்களுமே நடந்து வருகின்றன.

விஜிதரனுக்கு எது நடந்தாலும் சரி, அதாவது அவர் காணமற் போயிருப்பினும் சரி, கடத்தப்பட்டிருப்பினும் சரி அவரைக் கண்டுபிடித்துப் பிரச்சினையைத் தீர்ப்பது அவசியம் என்பதனை இம்மாதம் 11 ஆம் திகதிய உதயனில் இதே பத்தியில் வலியுறுத்தி இருந்தோம்.

அது ஏன் அவசியம் என்பதைப் பல கோணங்களிலும் அணுகி விளக்கி இருந்தோம்.

ஆனால் விஜிதரன் விவகாரம் இன்னும் மர்மமாகவே நீடிக்கிறது. வெறும் அறிக்கை வெளியீடுகளும், விதண்டாவாதங்களும், ஒரு சாரார் மறுசாரார் மீது சேறுபூசுவதும், சிலர் இவ்விவகாரத்தை வைத்துத் தமக்குச் செல்வாக்குத் தேட முயற்சிப்பதுமாகவே காரியங்கள் நடக்கின்றன.

நடக்க வேண்டிய காரியம் நடப்பதாக இல்லை. வேண்டாத வெறும் சில்லறைத் தனங்கள் நடக்கின்றன.

இது மிகவும் வேதனை தருவதாக உள்ளது. ஒரு மாணவன் விடயத்தில் எமக்குள் தீர்வைக்கண்டு மர்மத்தைத் துலக்க முடியாத எமக்கு தன்னாட்சி கிடைத்தால் எப்படி இருக்குமோ என்று நீண்ட தூரம் எண்ணத் தூண்டுகிறது.

மாணவன் விவகாரம் ஒரு மனிதாபிமான விஷயம். எமக்குள் உள்ள போட்டியும், பூசலும், கோஷ்டி சேர்தலும், சிண்டு முடிதலும், விருப்புப் பேசுதலும் ஒரு மாணவன் உயிரை மர்மத்தில் வைத்திருக்கின்றன. அதன் பயனாக மற்றும் ஆறு மாணவர்களின் உயிர்களும் ஆபத்து நிலைக்கு வந்திருக்கின்றன.

சாத்விகப் போராட்டத்துக்கு நாம் கொடுக்கும் மதிப்பும் மரியாதையும் இதுதானா? அவ்வாறாயின் தமிழர்களின் சாத்விகப் போராட்டங்களுக்கு சிங்கள அரசாங்கங்கள் செவி சாய்க்கவில்லை என்று குற்றஞ் சுமத்த எமக்கு என்ன யோக்கியதை உண்டு?

சாத்விகப் போராட்டங்கள் தோற்றதனால் தான் ஆயுதப் போராட்டத்தை நாட வேண்டி வந்ததாகக் கூறி வருகிறோம். பல்கலைக்கழக மாணவர் விடயமும் அப்படியே உருவெடுத்தால்...?

நினைக்கவே மனம் நோகிறது. எமது உள்வீட்டுப் பிரச்சினைகளையும் நாம் ஆயுதம் ஏந்தியே தீர்க்க வேண்டிய துரதிஷ்டம் தொடர வேண்டுமா? தொடருமா?

வேண்டாம். வேண்டாம். வேண்டவே வேண்டாம். எமக்குள் இருக்கும் பிரச்சினைகளை அகிம்சை வழியில், அன்பு வழியில், சமாதானமாகத் தீர்த்து நீதியை நிலை நாட்ட வேண்டும். அதன் ஆரம்பம் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் விவகாரத்தோடு தொடங்கட்டும். நீதி வழங்கப்படுதில் ஏற்படும் தாமதம், நீதி கிடைக்காது என்பதற்கு அறிகுறி. எனவே தாமதம் தவிர்க்கப்பட வேண்டும்.

# ஈராக் தாக்குதல்களை தடுக்கக் கோரிக்கை

தெஹ்ரான், நவ 25
மக்கள் வாழும் பிரதேசங்கள்மீது ஏவுகணைத் தாக்குதல்களையும் விமானத் தாக்குதல்களையும் ஈராக் மேற்கொள்வது தடை செய்யப்படல் வேண்டும்.

இவ்வாறு சர்வதேச ஸ்தாபனங்களை ஈரான் கோரியுள்ளது.

நேற்று ஈராக்கிய விமானங்கள் மேற்கொண்ட தாக்குதல்களில் 110க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் ஈரான் தெரிவித்தது.

ஐ. நா. செயலாளர் நாயகம் பெரஸ் டி கியூலர் தமது விசேட பிரதிநிதிகளை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி உண்மை நிலையை அறிய வேண்டும்எனவும் ஈரான் தெரிவித்துள்ளது. (ஓ)

## ஐ. நா. சபையில் சூடான விவாதம்

வாஷிங்டன், நவ.25
போக்லாந்து தீவுகள் தொடர்பான சூடான விவாதமொன்றில் பிரிட்டனும் ஆர்ஜென்டீனாவும்மோதிக் கொண்டன.

ஐ நா. பொதுச் சபையில் இந்த விவாதம் நடைபெற்றது.

கடந்த மாதம் பிரிட்டன் விதித்திருந்த தடை வலயப் பிரதேசம் யுத்த நிலையை ஏற்படுத்துவதாக உள்ளது என ஆர்ஜென்டீனா குற்றம் சுமத்தி விவாதித்தது.

இந்த தடை வலய உத்தரவு மீன்பிடி அபிவிருத்திக்கு மட்டுமே உதவும் எனவும் யுத்த பீதிக்கே இடமில்லை எனவும் பிரிட்டன் எதிர் விவாதம் செய்தது. (ஓ)

### பெல்ஜியமும் தடை விதிப்பு

புருசெல்ஸ், நவ. 25
பெல்ஜியம் தென் ஆபிரிக்கா மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது

இதனால் மசகு எண்ணெய் ஏற்றுமதியும், இரும்பு, எஃகு, தங்கம் இறக்குமதி புதிய சொத்து முதலீடுத் தடை என்பன இதில் அடங்கும். (ஓ)

### ஆர்ப்பாட்டம்

இஸ்லாமாபாத், நவ. 25
பாகிஸ்தானின் அணுசக்தித் திட்டம், அமெரிக்க விண்வெளிப் போர்த் திட்டம் ஆகியவற்றை எதிர்த்து லாகூரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பொலீஸார் இவர்களைக் கலைக்க தடியடிப் பிரயோகம் செய்தனர். (ஓ)

### வட துருவத்தில் பனி மனிதன்

அலாஸ்கா, நவம்பர் 25
வட துருவத்தில் பனி மனிதன் இருப்பதை விஞ்ஞானி ஒருவர் கண்டுள்ளார்.

கடந்த மூன்று வருடங்களாக அலாஸ்காவை அடுத்த வடதுருவப் பிரதேசத்தில் உயிரினங்கள் மற்றும் இயற்கையின் சீற்றங்கள் பற்றி ஆராய்ந்த பிரிட்டிஷ் விஞ்ஞானியான டாக்டர் மேகோ அவ்ரே என்பவர் பனி மனிதனைக் கண்டதாகத் தெரிவித்தார்.

பொதுவாக இமயமலைப் பகுதிகளிலேயே பனி மனிதன் இருப்பதாகவும் முதற் தடவையாக வடதுருவப் பகுதியிலும் காண முடிந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இரண்டு காலில் எழுந்து நிற்கும் போது பனி மனிதன் உயரம் சுமார் ஒன்பது அடியாகும் எனவும் ஓடும்போது துருவக் கரடிகளைப் போல நாலு கால்களில் பாய்ந்து பாய்ந்து ஓடுவதாகவும் அவர் தெரிவித்தார். (ஓ)

## உத்தரவின்றியே ஆயுதம் பறிமுதல்

புதுடில்லி, நவ. 25
திட்டவட்டமான உத்தரவு இன்றியே தமிழ் நாடு பொலிஸார் தமிழ்ப் போராளிகளிடம் இருந்து தகவல் தொடர்பு சாதனங்களைக் கைப்பற்றி இருந்தனர்.

இப்படி விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிப்பதாக பிரபல அரசியல் விமர்சகர் ஜி.கே. ரெட்டி இந்துவில் எழுதியிருக்கிறா.

மாநில அரசுக்குத் தெரியக் கூடிய விதத்திலேயே தமிழ்ப் போராளிகள் தகவல் தொடர்பு சாதனங்களை இரண்டு மூன்று ஆண்டுகளாகப் பாவித்து வந்துள்ளனர்.

இலங்கையுடன் ராஜதந்திர ரீதியில் சிக்கலான பேச்சுக்கள் நடக்கும் தருணத்தில் மத்திய அரசின் அனுமதி இன்றி இந்த நடவடிக்கையைத் தமிழ் நாடு அரசு எடுத்துள்ளது

இப்படி திரு ரெட்டி 'இந்து'வில் எழுதியிருக்கிறார். (ஓ-எ)

## பெரு நாட்டிற்கு கடன் நிறுத்தம்

லீமா, நவ. 25
சர்வதேச நாணய பிரிவு பெருநாட்டிற்கு கடன் வழங்குவதை நிறுத்தியுள்ளது

பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்காத காரணத்திற்காக மேலும் உதவிகள் வழங்கப்பட மாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய பிரிவு கடன் வழங்குவதை நிறுத்தி வைக்கும் முதலாவது லத்தீன் அமெரிக்க நாடு பெருவாகும்.

பெருநாடு 18 கோடி டாலர் கடனைப் பெற்றிருந்தபோதும் இந்த மாதம் 15 ஆம் திகதி வரை 3 கோடி 50 லட்சம் டாலர்களையே திருப்பிக் கொடுத்துள்ளது.

பெருநாட்டின் ஜனாதிபதி அலன் காஸியா, நாட்டின் கையிருப்புப் பணம் திருப்தியாக இல்லை என்றும் அதனால் கடனைக் கொடுத்து நாட்டை உருக்குலைக்கத் தாம் தயாராக இல்லை என்றும் அறிவித்தார்.

இதுவரைகாலமும் வியட்னாம், சூடான், லைபீரியா, கானா ஆகிய நாடுகள் மாத்திரமே சர்வதேச நாணய நிதிப்பிரிவின் நிதி உதவி நிராகரிக்கப்பட்ட நாடுகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன. (ஓ)

## நேச நாடுகள் எதிர்ப்பு

கெய்ரோ, நவ 25
அமெரிக்காவின் நெருங்கிய மத்தியகிழக்கு நேச நாடுகளான எகிப்தும் ஜோர்தானும் அமெரிக்காவை கண்டித்துள்ளன.

ஈரானுக்கு ரகசியமாக அமெரிக்கா ஆயுதம் விற்பனை செய்வதை எதிர்த்தே இந்தக் கண்டனம் எழுப்பப்பட்டுள்ளது.

ஈரான் அரபு உலகத்தின் பாதுகாப்புக்கு ஒரு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் இவ்வேளையில் அமெரிக்கா ஆயுத உதவி அளித்துள்ளது மன்னிக்க முடியாத குற்றமாகும் என அவ்விரு நாடுகளும் தெரிவித்தன. (ஓ)

## வீரமணி கண்டனம்

சென்னை, நவ. 25
அரசியல் சட்டத்தின் ஒரு பகுதியை எரித்தற்காக திராவிட முன்னேற்றகழக உறுப்பினர் பதவியை இழந்துவிட்டதாக சட்டப் பேரவை சபாநாயகர் பாண்டியன் அளித்த தீர்ப்பை திராவிட கழக பொதுச் செயலாளர் வீரமணி கண்டித்துள்ளார்.

நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் தான் சட்டப்பேரவை நடவடிக்கைகள் அமைய வேண்டும் எனவும் வீரமணி தெரிவித்தார்.

ஜனநாயகத்திற்கு விரோதமான செயல் இதுவாகும் என கம்யூனிஸ்ட் சட்சியும் கண்டனம் தெரிவித்தது. (ஓ)

**வெளி உலகில்**

### 20 ஆண்டு நிறைவு

மணிலா, நவ. 25
20 ஆவது ஆண்டு நிறைவை நாளை கொண்டாடவுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கி இரண்டாயிரம் கோடி அமெரிக்க டாலர்களை கடனாக பல] ஆசிய நாடுகளுக்கு வழங்குயுள்ளது. இதன் தலைமை அலுவலகம் பிலிப்பீன்ஸில் உள்ளது. (ஓ)

### கருத்தடைக்கு பரிசு அறிவிப்பு

லக்னோ, நவ. 25
உத்தரப்பிரதேச மாநிலத்தில் கருத்தடைப் பிரசாரம் செய்பவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

நூறுபேரை கருத்தடை சிகிச்சைக்குள்ளாக்கும் குடும்பத் திட்ட அலுவலர்களுக்கு வர்ணத் தொலைக்காட்சி பெட்டி ஒன்று பரிசாக வழங்கப்படும். (ஓ)

### பங்குவிலை உயர்கிறது

மணிலா, நவ. 25
பிலிப்பீன்ஸ், பாதுகாப்பு அமைச்சர் என்ரைல் ராஜினாமாவைத் தொடர்ந்து அங்கு பங்குகளின் விலை உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# தடுப்பு முகாம்களுக்கு பிக்குகளை உள்ளடக்கிய அமைப்புச் செல்லும்

யாழ்ப்பாணம், நவ 26
பௌத்த பிக்குமார்களை உள்ளடக்கிய அமைப்பு ஒன்று விரைவில் பூஸா, களுத்துறை, வெலிக்கடை தடுப்பு முகாம்களுக்கு விஜயம் செய்து தீவிரவாத சந்தேக நபர்களை சந்தித்து உரையாட முடிவு செய்துள்ளது.

'தேசிய ஐக்கியத்துக்கான ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்பும் சங்கம்' தான் மேற்படி அமைப்பு ஆகும்.

சுமார் 200 க்கு மேற்பட்ட பிக்குமார்களை உள்ளடக்கிய இந்த அமைப்பு இன, மொழி வேறுபாடுகளுக்கு இடமின்றி தென்னிலங்கையில் தனது பிரசாரத்தை நடத்தி வருகிறது.

தடுப்பு முகாம்களிலுள்ள தீவிரவாத சந்தேக நபர்களை சந்திக்கும் இக்குழு அவர்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்து அதற்கான பரிகாரங்களை ஆராயும்.

சந்திப்பு முடிவடைந்த பின்பு யாழ்ப்பாணம் சென்று மக்களைச் சந்தித்து நிலைவரத்தை இந்த அமைப்பு ஆராயுமாம்.

அதே நேரம் தமிழீழ விடுதலை புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு இராணுவ வீரர்களையும் விடுவிப்பதற்காக இந்த அமைப்பு புலிகள் இயக்க தலைவர்களையும் சந்தித்து உரையாடுமெனக் கூறப்படுகிறது. (இ-21)

## விஜி விவகாரத்தில் நாம் ஒதுங்கியது ஏன்?

### புலிகள் பிரமுகர் விளக்குகிறார்

பலாலி, நவ.26
விஜிதரன் விவகாரத்தில் நாம் ஒதுங்கியது ஏன்?

அச்சுவேலியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய புலிகளின் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் முரளி இதுபற்றிப் பிரஸ்தாபித்தார்.

கருத்தரங்கில் முரளி கூறியதாவது:-

வீட்டில் படுத்திருக்க எவரோ அழைக்க வெளியில் சென்ற விஜிதரன் மீண்டும் வந்து செருப்புப் போட்டுக் கொண்டுகதவையும் பூட்டிச்சென்றார் என்று கூறப்படுகின்றது கடத்தல் என்பது இப்படியா நடக்கும்?

விஜிதரனுக்காக இன்று நடத்தப்படுகின்ற போராட்டம் சகல பல்கலைக்கழக மாணவர்களாலும் முன்னெடுக்கப்படவில்லை.

குறிப்பிட்ட சிலரே இதில் முன்னின்றுசெயல் படுகின்றனர்.

எமக்கெதிரான இயக்கம் ஒன்று இதன் பின்னணியில் இயங்குவதனை நாம் உணர்கின்றோம்.

பிரசாரங்கள், கருத்துக்கள், கண்டனங்கள், எல்லாம் எம்மையே சுட்டிச் சாடுகின்றன.

இதனாலேயே விஜிதரன் சம்பந்தப்பட்ட போராட்டத்தை முன்னெடுக்க ஆரம்பத்தில் முன்னின்று செயற்பட்ட நாம் பின்பு அப்போராட்டத்தில் இருந்து ஒதுங்கினோம்.

வேண்டுமென்றே எம் மீது சுமத்தப்படும் பழிச்சொல்லின் தற்பரியம் என்றாவது ஒருநாள் வெளிவராது போகாது. இந்த உண்மை மிக விரைவில் வெளியாகியே தீரும்.

அப்போது [illegible] புனிதத்தைப் பற்றிப் [illegible]

இப்படி அவர் கூறினார். (இ-119)

## விவசாய விழாவும் கதிர் வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ. 26
விவசாய விஞ்ஞான மன்றம் நடத்தும் விவசாயவிழாவும்கதிர்வெளியீடும் இன்று புதன் கிழமை காலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சப்த மண்டபத்தில் நடைபெறும்.

திரு.ஆர் வி.எஸ். திருநாவுக்கரசு தலைமை வகிப்பார்.

சிவநெறிப் புரவலர் திரு.க. கனகராசா சிறப்பு அதிதியாக கலந்து கொள்வார். (இ-எ)

## நோயற்ற வாழ்வே பலமான அத்திவாரம்

### சுகாதார கருத்தரங்கில் உரை

பலாலி, நவ. 26
எமது இனத்தின் எதிர் காலம் ஒரு பலமுள்ள அத்திவாரத்தில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும். அந்த அத்திவாரம் நோயற்ற வீரம்செறிந்த இளைஞர்களை உருவாக்கு [illegible] வாழ்வே குறைவற்ற [illegible]

இவ்வாறு தாவடி சுகாதாரக் குழுப் பணி மனையில் நடைபெற்ற சுகாதாரக் கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய தெல்லிப்பளை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி சி. கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.

திரு சாமி. இரத்தின சர்மா தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம். தெய்வேந்திரனும் கருத்துரை வழங்கினார். (உ-119)



**பொய்யாமொழி**

குறள்:
எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்
மாணாசெய் யாமை தலை.

பொருள்:
எவ்வளவு சிறியதாயினும் எக்காலத்திலும் எவரிடத்திலும் மனத்தால் எண்ணி உண்டாகின்ற துன்பச் செயல்களைச் செய்யாதிருத்தலே சிறந்தது.

### விஜிதரன் விவகாரம்

## மண்மீட்கும் போராட்டத்தை மழுங்கடித்து விடும்

சுன்னாகம், நவ. 26
தமிழ் மண்ணின் கீர்த்தியை உயர்த்தவும், தமிழ் மண்ணில் இன்னமும் நீதி சாகவில்லை என்பதை உலகறியச் செய்யவும் யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் விடுதலை செய்யப்பட்டு அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவேண்டும். இது போன்ற நிகழ்வுகள் மீண்டும் நிகழ்தல் புனித மண்மீட்கும் போராட்டங்களை மழுங்கடித்து விடும்.

விஜிதரனைக் கடத்தியோர் நிபந்தனையின்றி அவரை விடுதலை செய்ய வேண்டும்.

சுன்னாகம் பிரசைகள் குழு வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பிரசைகள் குழுவின் செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மேற்குறிப்பிட்ட பத்திரிகைக் குறிப்பு, விஜிதரன் விவகாரத்தில் காலதாமதம் செய்யும் நிலை தமிழ் சமுதாயத்தின் தற்கொலைக்கு ஒப்பானது எனவும் கண்டித்துள்ளது

விஜிதரனை தேடிக் கண்டுபிடிக்கும் சகல முயற்சிகளையும் வரவேற்றுள்ள சுன்னாகம் பிரசைகள் குழு, மாணவர் சக்தியை எவரும் குறைத்து மதிப்பீடு செய்யக் கூடாது எனவும் எச்சரித்துள்ளது. (இ-27)

### வகுப்பு 10 ஆம் ஆண்டு வரை:

## அடுத்த ஆண்டில் புதிய பாடத்திட்டம்

பலாலி, நவ. 26
அடுத்த ஆண்டு முதலாம் தவணை தொடக்கம் 10ஆம் ஆண்டு வரையும் புதிய பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இவ்வருடம் 2,5,7.8,9 ஆம் ஆண்டுகளில் உள்ள பாடத்திட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களுக்கு மேலதிகமாக 3,6,10 ஆம் ஆண்டுகளிலும்பாடத்திட்டங்களில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன

கடந்த ஆண்டில் முதலாம், நான்காம் ஆண்டுகளில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பாடத்திட்ட மாற்றங்கள் 1987ஆம் ஆண்டு 10ஆம் ஆண்டு வரைக்கும் முழுமைப் படுத்தப்படும்.

1988ஆம் ஆண்டில் 11 ஆம் ஆண்டிற்கும் பாடத்திட்ட மாற்றம் செய்யப்படும். எனத் தெரிவிக்கப்படுகிறது.

முழு மாற்றம் பெறும் பாடத்திட்டங்களுக்கான பாடப்புத்தக தயாரிப்பு வேலைகள் துரிதகதியில் தற்போதிருந்தே தொடங்கப்பட்டுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

க பொ.த உயர் தர வகுப்புப் பாடத்திட்டங்களின் மாற்றம் பற்றி எந்த வித அறிவித்தல்களும் விடுக்கப்படவில்லை. (உ-119)

## பலர் மயங்கி விழுந்தனர்

யாழ்ப்பாணம், நவ.26
திங்களன்று நடந்த புலிகளின் பேரணியின் இறுதியில் நல்லூர் கோவிலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், பலர் மயங்கி விழுந்தனர். (இ-5)

## கிராம வளர்ச்சிக்கு சனசமூக நிலையங்கள்

### திறப்பு விழாவில் உரை

வேலணை, நவ. 26
இன்றைய காலகட்டத்தில் கிராமத்தின் வளர்ச்சிக்கு சனசமூக நிலையங்கள் அத்தியாவசியமானதாக விளங்குகின்றன.

மேற்கண்டவாறு வேலணை கிழக்கு அண்ணா சனசமூக நிலையத்தை திறந்துவைத்து உரையாற்றிய யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் வேலணை உப-அலுவலக அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. சி. சிவராஜா குறிப்பிட்டார்.

திரு. நா. கார்த்திகேசு தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழாவில் சிவராஜா தொடர்ந்து உரையாற்றுகையில் கலை, கலாசாரங்கள் அழிந்துவிடாமல் பாதுகாப்பதற்கான செயல் திட்டங்களை சனசமூக நிலையங்கள் வகுக்க வேண்டும் என்றார்.

சனசமூக நிலையங்கள் நல்லமுறையில் செயல்பட வேண்டும் என்றும், அபிவிருத்திச்சபை உப அலுவலக ஒப்பந்தவேலைகளை எடுத்து செய்வதற்கு முன்வரவேண்டும் என்றும் அவர் கூறினார்.

இத்திறப்பு விழாவில் திருமு.ஆறுமுகம், திரு.வீ. நடராஜா ஆகியோரும் உரையாற்றினார்கள். (உ-167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று
ரூ. 5/- மட்டுமே!
* Processing Free (நெகடிவ் செய்ய இலவசம்.
* வர்ண புகைப்படச் சுருள்கள் விற்பனைக்கு)
KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23628

# உதயன்

26 - 11 - 1986 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது!

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

* தரமான வர்ண நிழற்படப் பிரதிகளை
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில்
* சிறந்த சேவையில்

பெற்றுக்கொள்ளலாம்.

ஊரடங்குநாட்களில்

# முள்ளியவளையில் நிகழ்ந்த அசம்பாவிதங்கள்

## பலர் சுட்டுக்கொலை வீடுகள் எரிக்கப்பட்டன

முள்ளியவளை, நவ. 26
கடந்த வாரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்ட போது முள்ளியவளைப் பகுதியில் பெரும் அழிவுகள் ஏற்பட்டன.

சம்பவங்கள்பற்றி உதயன் முள்ளியவளை செய்தியாளர் தரும் தகவல்கள் வருமாறு:-

வியாழன் இரவு ஆயுதப் படையினர் ஹெலிக்கொப்டர் மூலம் பூதன்வயல், வெள்ளைமலை பகுதிகளில் கொண்டு வந்து இறக்கப்பட்டனர்.

ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்த வெள்ளிக்கிழமை காலை ஆயுதப் படையினர் முள்ளியவளையை நோக்கி நகரத் தொடங்கினர்.

### துண்டுப் பிரசுரம்

வெள்ளைமலை ஏற்றத்தில் இருந்து நகர்ந்த துருப்புக்களுக்கு ஆகாயப் பாதுகாப்பு வழங்கிய ஒரு சீ பிளேனில் இருந்தும் இரண்டு ஹெலிக்கொப்டர்களில் இருந்தும் துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன. பின்னர் சரமாரியாக அவை துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டன.

பொதுமக்களைப் பாதுகாப்பாக பொது இடங்களிலும் ஆலயங்களிலும் இருக்கும்படி துண்டுப்பிரசுரங்களில் எழுதப்பட்டிருந்தது.

'ஹெலி' நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் வற்றாப்பளையில் ஐந்து பேர் இறந்தனர்.

கள்ளுத் தவறணைக்கு வந்த ஆயுத படையினர் 3 பெரிய பானைகளில் இருந்த கள்ளைக் குடித்தனர். பின்னர் கள்ளுத் தவறணை தரைமட்டமாக்கப்பட்டது.

முள்ளியவளையில் உள்ள மினித்தியேட்டர் எரிக்கப்பட்டது வீடுகளுள் புகுந்தவர்கள் பெறுமதியான பொருள்களை அகற்றிச் சென்றனர்.

பின்னர் படையினர் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியை நோக்கிச் சரமாரியாகச் சுட்டனர். ரவைகள் பாடசாலைச் சுவரைத் துளைத்துச் சென்றன.

பாடசாலையில் இருந்த மாணவர்கள் நிலத்தில் படுத்து உயிர் தப்பினர்.

உள்ளே புகுந்த படையினர் தரையில் படுத்துக் கிடந்த மாணவர்களை வெளியே இழுத்து வந்து நையப்புடைத்தனர்.

அவர்கள் மாணவர்கள் என்று அதிபர் சொன்ன பின்னர்தான் மாணவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

### மதுபானக் கடை சேதம்

பொதுமக்கள் தஞ்சம் அடைந்திருந்த மண்டபத்தினுள் நுழைந்த படையினர் வயது போனவர்கள், மாணவர்கள் உட்பட 37பேரைப்பிடித்துக் கொண்டு வெளியே வந்தனர்.

காட்டுவிநாயகர் ஆலயத்தின் அருகில் இருந்து பிடித்துக்கொண்டு வரப்பட்ட 17 பேரையும் 37 பேருடன் கூட்டிக் கொண்டு சந்தைப் பக்கம் படையினர் சென்றனர்.

பின்னர் மதுபானக் கடை உட்பட இரண்டு கடைகள் உடைக்கப்பட்டன; சூறையாடப்பட்டன.

அச்சமயம் இரண்டு சிப்பாய்கள் சூடுபட்டு இறந்தனர். அவர்களின் சடலங்களைத் தூக்கியபடி படையினர் சென்றனர்.

பூதன்வயல் பக்கம் இருந்து வந்த படையினர் வற்றாப்பளை 3ஆம் கட்டையடியில் குமுழமுனையில் இருந்து வந்த மூன்று பேரைச் சுட்டனர்.

பின்னர் பூதன் வயலில் வைத்துப் பிடிக்கப்பட்ட நான்கு பேரை பின்னால் கைகளைக் கட்டிய வண்ணம் இழுத்துக் கொண்டு போய் தண்ணீரூற்று விதானையார் வீட்டுக்குள் வைத்துச் சுட்டனர்.

அவர்களுள் தண்ணீரூற்றைச் சேர்ந்த சுந்தரலிங்கமும் ஒருவர். மற்ற மூவரையும் அடையாளம் காணமுடியவில்லை.

அங்கு நின்ற டிராக்டர் ஒன்றும் எரிக்கப்பட்டது.

### வீடுகள் தகர்ப்பு

கணுக்கேணி வந்த படையினர் விசுவலிங்கம் என்பவரின் வீட்டில் இருந்த அனைவரையும் கட்டி வைத்து நையப்புடைத்தனர்.

பொ. சிவராசா, சு. குலசேகரம், சி. சோமசுந்தரம், நா. பொன்னையா, இ. விக்னராசா, நா. தாமோதரம்பிள்ளை, சி. இரத்தினசிங்கம் ஆகியோரின் வீடுகள் எரிக்கப்பட்டன.

குமுழமுனைச் சந்தியில் திருமதி அரியரத்தினம் என்பவரின் வீடு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. விக்னம் மாஸ்டரின் வீடு 40 நெல் மூடை நெல்லுடன் எரிக்கப்பட்டது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தவர்களில் அடையாளம் காணப்பட்டவர்கள் விவரம் வருமாறு;

அ. ஜெயரத்தினம், சு. யோகராசா, பாலசிங்கம். பாலசிங்கம் யாழ். பல்கலைக்கழக மாணவன். குமுழமுனை வாசி.

பாலசிங்கம் அணிந்து இருந்த கைக்கடிகாரம், தங்கச்சங்கிலி, மோதிரம் அகற்றப்பட்டன.

அடையாளங் காண முடியாதபடி சடலங்கள் மீது அசிட் ஊற்றப்பட்டிருந்தது.

உதயன் முள்ளியவளை செய்தியாளரின் வீடும் உடைக்கப்பட்டு, பொருட்கள் சூறையாடப்பட்டன.

முள்ளியவளை வாசியான யோகராணி தாலிக்கொடியைப் பறிகொடுத்தார்.

குமாரபுரம், கணுக்கேணி ஆகிய பகுதிகளில் வீடுகள் கொள்ளை இடப்பட்டன; சேதப்படுத்தப்பட்டன.

முள்ளியவளை — தாளையடி வீதியடிக் கடையில் இனந்தெரியாத இரண்டு பேர் கத்தியால் வெட்டப்பட்டனர்.

பூதன்வயல் என்னும் இடத்தில் ஒரு சிப்பாயின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததால் இன்னொரு சிப்பாய் உயிரிழந்தார்.

இவ்வளவு சம்பவங்களுக்குள்ளும் சீ பிளேன் வட்டமிட, ஹெலிக்கொப்டர்களில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டது.

டொலர் பாம், கென்ட் பாம் பக்கம் இருந்து குமுழமுனை வந்த ஆயுத படையினர் 12 தமிழரை கைதுசெய்தனர்.

இவர்களில் 9பேர் விடுவிக்கப்பட்டனர். பாடசாலை மாணவர் சிலர் உட்பட சிலர் தடுத்து வைக்கப்பட்டனர்.

(இ-எ-93)

## 45-ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு; 11-09-72 இறப்பு; 13-10-86

தொப்புள் அறுக்கையிலே
தொடர்பும் அறுந்திருந்தால்
கணநேரக் கலக்கத்தில்
கவலையை மறந்திருப்போம்
பாலூட்டி சீராட்டி
தாலாட்டி வளர்த்ததுவோ
வாலிபத்தின் ஓரத்திலே
வந்துவிட்ட நேரத்திலே
காலத்தின் பிடியினுள்
கரைந்து நீ போவதற்கோ!

துயருடன் நினைவுறும்
பெற்றோர், தம்பி, தங்கை

## நீத்தார் பட்டியல்

### திருமதி வசந்தாதேவி பரராஜசிங்கம் (சேலி)

திருநெல்வேலி தெற்கைச் சேர்ந்த திருமதி வசந்தாதேவி பரராஜசிங்கம் 24-11-86 அன்று சென்னையில் காலமானார். அன்னார் காலம் சென்ற பொன்னையா பரராஜசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற விஸ்வரட்ணம் நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், மனோன்மணி சரவணமுத்துவின் அன்பு மருமகளும், மஜுரதன், நிஷங்கா ஆகியோரின் அருமைத் தாயாரும், சரோஜினிதேவி, சிவலோகநாதன் (உரிமையாளர்: ஆர்த்திஜுவல்லர்ஸ்), சாந்தாதேவி, சந்திராதேவி, சூரியகுமாரி, நிர்மலாஜினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தட்சணாமூர்த்தி (நடேஸ்வராக்கல்லூரி) ஜெகதீஸ்வரி (சென்னை) குலசிங்கம் சோமபாலன், சிவநேசன் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-11-86 வியாழக்கிழமை சென்னையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சிவலோகநாதன்

## வவுனியாவில் சுடப்பட்டவர் நேற்று மரணம்

யாழ்ப்பாணம், நவ. 26
திங்கட்கிழமை வவுனியாவில் சிப்பாய்களின் சூட்டுக்கு இலக்கான பெண் ஒருவர் நேற்று மரணமானார்.

20 வயதுடைய யேசுதாசன் சுமத்திரா என்ற பெண்ணே மரணமானவராவார்.

திங்கட்கிழமை பகல் வவுனியா நகருக்கு மரக்கறி வாங்கச் சென்ற பொழுதே இவர் சிப்பாய்களின் சூட்டுக்கு இலக்கானார். (இ-10)

## விவசாய நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 26
விவசாயப் போதனாசிரியர்கள் தி. வ. கதிரமலை, திரு எஸ் பேரின்பநாதன் ஆகியோரால் எழுதப்பட்ட 'மிளகாய்ச் செய்கையில் உயர் விளைச்சல் பெறுவதெப்படி?'' ''உங்கள் எலுமிச்சை பயன் தர வில்லையா?'' என்னுமிருநூல்களின் வெளியீட்டு விழா இன்று நடைபெறவுள்ளது.

நெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் திரு. சி. சிவமகாராசா தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் மேலதிக அரச அதிபர் திரு க. இராம[illegible] கலந்து கொண்டு நூல்களை வெளியிட்[illegible] வார். (இ.5)

## உண்ணாவிரதிகள் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 26
மழை காரணமாக நேற்று உண்ணாவிரதிகள் ஓலைக் கொட்டிலில் இருந்து பல்கலைக்கழக கட்டடத்தினுள் இடம் மாற்றப் பட்டனர். (இ-5)

## காயம்...

(1ஆம் பக்க தொடர்ச்சி)
சாரதியாக கடமையாற்றுகிறார். 5 பிள்ளைகளின் தந்தை.

பி. பத்மநாதன் (30 வயது) மண்டைதீவு, ஏ கதிரமலை (43 வயது) யாழ்ப்பாணம்.

ஈ. ஜெக்கோ. கே. கமலாதேவி, ஏ. செல்வநாதன் [illegible] ரும் ஆர். ஜி. கட்டடத் [illegible] வர்கள். (இ-10)

## நெடுந்தீவுக் கடலில் கைதான 30 பேரும் பலாலி முகாமில்

### உறவினர்பார்வையிட அனுமதி

யாழ்ப்பாணம், நவ. 26
மூன்று வாரங்களுக்கு முன் நெடுந்தீவுக்கடலில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 30 பேரும் பலாலிஇராணுவ முகாமில் உள்ளனர் என்று பொதுசனத் தொடர்பு அதிகாரியும் உதவி அரச அதிபருமான திரு. சு. குலசேகரம் தெரிவித்தார்.

இந்தியா சென்ற இப்படகில் அகதிகள், மேளக் கோஷ்டியினர் உட்பட 30 பேர் இருந்தனர்.

இவர்களில் ஒருவர் ஷெல் தாக்குதலில் இரு கால்களும் இழந்தவர்.

இவர்களை தீவிரவாதிகள் என்று அரசின் தொடர்பு சாதனங்கள் அறிவித்திருந்தன.

இவர்களின் குடும்பத்தினர் அரச அதிபரிடம் முறையிட்டதைத்தொடர்ந்து. அரச அதிபரின் முயற்சியால் இவர்கள் பலாலி முகாமில் இருப்பது தெரியவந்தது.

உறவினர்கள் இவர்களை பார்வையிட முகாம் பொறுப்பதிகாரிகள் அனுமதிஅளித்துள்ளனர்.

எதிர் வரும் சனிக்கிழமை உறவினர்கள் சென்று பார்வையிடுவதற்கான ஒழுங்குகளை அரச அதிபர் மேற்கொண்டுள்ளார், (இ-5)

## 2 நாள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வீதியில் மற்றும் இரண்டு ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன.

இதனால் டாக்சி சாரதி ஒருவரும் வேறு இருவரும் காயமடைந்தனர்.

மற்றொரு குண்டு ஸ்ரான்லி வீதியில் உள்ள குலம்சன்ஸ் கடைமீது விழுந்து வெடித்தது. கடையின் மேல் பகுதி ஓடுகள் சேதமடைந்ததுடன் கடைக்கு எதிரே உள்ள ஆர். ஜி கட்டடத்தினுள்ளும் ஷெல் துண்டுகள் பாய்ந்தன.

கட்டடத்தின் ஜன்னல் கண்ணாடிகள் வேறு தளபாடப் பொருள்களும் சேதமடைந்தன.

கட்டடத்தினுள் கடமையாற்றிக் கொண்டிருந்த மூன்று ஊழியர்கள் காயமடைந்தனர்.

யாழ் ஸ்ரான்லி வீதியில் ஷெல் விழுந்து வெடித்தது இதுவே முதல் தடவை ஆகும். (இ-10)

## சுகவீனமுற்ற...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
(அல்சர்) நோய் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது

நோயாளி ஒருவர் உண்ணாவிரதத்தால் இறப்பது நல்லதல்ல என்ற முடிவின்படி மாணவர் அவை அவரைப் போராட்டத்திலிருந்து இடைநிறுத்தியது.

அவருக்குப் பதிலாக விஞ்ஞான பீட மாணவி ஒருவர் உண்ணாவிரதத்தினை நேற்று முதல் மேற்கொண்டுள்ளார். (இ - 5)

## முள்ளிப்பொத்தானை மினி...

நிறுவிவருகிறது

அவ்வாறு அமைக்கப்பட்ட சிங்களக் குடியேற்றமாகிய முள்ளிப் பொத்தானையில் அங்குள்ள சிங்கள மக்களுக்கு பாதுகாவலாக ஓர் மினி இராணுவமுகாமையும் அமைத்தது

இம் முகாமில் 25 ஊர்காவல் படையினரும் 25 கொமாண்டோக்களும் தங்கியிருந்தனர்.

திங்கட்கிழமை நள்ளிரவு 12 மணி அளவில் எமது வீரர்கள் இம் முகாம் மீது பாரியதாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலானது சுமார் 1½ மணி நேரம் நீடித்தது.

தாக்குதலின்போது கொமாண்டோக்களும், ஊர்காவல் படையினரும் முகாமைவிட்டு பின்வாங்கினர்.

தாக்குதலின் இறுதியில் 3 கொமாண்டோக்களின் சடலங்கள் முகாமினுள் காணப்பட்டன. அத்துடன் பலர் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள்.

தாக்குதலின் இறுதியில் முகாமில் இருந்து பல துப்பாக்கிகளும், ரவைகளும், ஏனைய பொருட்களும் எம்மால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பொருட்களின் விவரங்கள்:-

1. 2 எஸ். எல். ஆர். றைபிள்கள், 2. 1 - 303 றைபிள், 3. 1 றிபீட்டர் துப்பாக்கி, 4. 2 எஸ். எல். ஆர். றைபிள் மேலதிக ரவைக் கூடுகள், 5. 1500 7·62 ரக றைபிள் ரவைகள் 6. 200 303 ரக றைபிள் ரவைகள், 7. 40 தோட்டாக்கள், 8. 10 ஹெல்மெட்டுக்கள் 9. 1 வோக்கி டோக்கி, 10. 5 இஸ்ரவேல் தயாரிப்பு ஜே. ஆர் கிறனேட்டுக்கள், 11. 1 படப்பிடிப்பு கமெரா, 12. 7 செற் இராணுவ சீருடைகள், 13. 2 கொமாண்டோக்களின் அடையாள அட்டைகள்

இத்தாக்குதலின்போது எமது தரப்பில் எதுவித இழப்புகளும் ஏற்படவில்லை

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

## மதகுருமார்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)
யில்; ''விஜிதரனை விடுதலை செய்யாவிடினும், அவர் பற்றி சிறு தகவல் ஒன்றையாவது தாருங்கள்; அதன்பின் உண்ணாவிரதத்தை நிறுத்துகின்றோம்;

இயக்கங்களில் ஒன்றுதான் கடத்தியதாக மதகுருமார் முன்னிலையில் இட்டு ஒப்புக்கொண்டுள்ளார்.

எனவே உண்ணாவிரதத்தை நிறுத்தும் படிகேட்காமல்; விஜி பற்றிய தகவல்களைத் தரும்படி இயக்கங்களை நிர்ப்பந்தியுங்கள்'' என்று தெரிவித்தனர்.

தொடர்ந்து முயற்சி செய்வதாக மதகுருமார் உறுதியளித்துச் சென்றனர். (இ - 5)

## ஷெல் தாக்குதலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பார ஸ்தாபனங்கள் முற்றுமுழுதாக சேதமாக்கப்படுகின்றன.

இந்த வியாபாரத் தொழிலையே நம்பிகாலம் காலமாக சீவனம் செய்பவர்களும் ஆயிரக்கணக்கான கடைச் சிப்பந்திகளும் பெரும் பாதிப்புக்குள்ளாகிஏழ்மை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரின் கண்மூடித்தனமான இந்த தாக்குதல்களினால் அப்பாவிப் பொதுமக்கள் நாளாந்தம் படுகொலை செய்யப்படுகின்றனர். எதுவுமறியாத வர்த்தகர்களின் உயிர்களும் உடைமைகளும் அழித்தொழிக்கப்படுகின்றன. இவர்கள் குடும்பங்கள் நிர்க்கதிக்குள்ளாக்கப் படுகின்றன.

நகரில் உள்ள வர்த்தக நிலையங்களைத் தரைமட்டமாக்குவதால் இந்த நகரை அண்டிவாழும் பல இலட்சக்கணக்கான மக்களைப் பட்டினிச் சாவுக்கே இட்டுச் செல்லும் என்பதை ஆட்சியாளர்கள் [illegible] கண்மூடி [illegible] கடந்த மூன்று நாட்களில் மட்டும் சுமார் பதினைந்து பலதரப்பட்ட வியாபார நிலையங்கள் இந்த மோட்டோ ஷெல் தாக்குதல்களினால் சேதமாக்கப் பட்டுள்ளன. பத்துத் பொதுமக்கள் வரை கொல்லப்பட்டுள்ளனர். சுமார் ஐம்பது பேர்வரை படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் யாவரும் தத்தமது கடமை காரணமாக யாழ்நகருக்கு வந்த அப்பாவிப் பொதுமக்களே. வியாபார நிலையங்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் சுமார் ரூபா ஒரு கோடி.

இந்நிலையை மேலும் தொடரவிடாமலும் அப்பாவிப் பொதுமக்களை உயிர்ப்பலி கொள்ளாமலும் இருப்பதற்காக இராணுவத்தினர் யாழ் நகரில் உள்ள வர்த்தக நிலையங்களை நோக்கி மோட்டோ ஷெல் ஏவுவதை நிறுத்துமாறு யாழ்நகர் வர்த்தகர்கள் சார்பிலும், பொதுமக்கள் சார்பிலும் பணிவாக வேண்டுகிறோம்.

இப்படிக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சிவதீட்சை வைபவம்

யாழ்ப்பாணம், நவ. 26
இம்மாதம் 28 ஆம் திகதி காலை 8 மணி அளவில் சங்கானை வெல்லில் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் 'முத்தமிழ்க் குருமணி' சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்களால் சிவதீட்சை வழங்கப்படவுள்ளது

இதில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் ஆலயத் தர்மகர்த்தாக்களுடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகின்றனர். (இ-எ)

## பொதுக்கூட்டம்

புங்குடுதீவு, நவ. 26
புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலய 'அபிவிருத்திச் சங்கத்தின்' விசேஷ பொதுக்கூட்டம் இன்று புதன் காலை 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். (இ-131)

## அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 26
கடந்த 21 ஆம் திகதி படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு பலியான முள்ளியவளை படிப்பக ஸ்தாபகரான குமுழமுனையைச் சேர்ந்த திரு. க. கோபாலசிங்கத்தின் மறைவுக்கு முள்ளியவளை மாணவர் படிப்பகம் இதய அஞ்சலியைத் தெரிவித்துள்ளது.

உயிரிழந்த திரு. கோபாலசிங்கம் யாழ் பல்கலைக் கழக விஞ்ஞான பீட மாணவன் ஆவர். (இ-எ)

## அடுத்த சில---

(1ஆம் பக்கத் தொடர்)
படவேண்டும். இதற்கான உதவிகளை அரசாங்கம் எங்கிருந்தும் பெறும்.

இப்படி அமைச்சர் சொன்னார்.

சுதந்திரக்கட்சி எம்.பி திரு. அமரசிறி தொடங்கொட பேசுகையில் இலங்கை அரசு அமெரிக்க ஆயுதங்களை இஸ்ரவேல் மூலம் பெறுகின்றது.

இஸ்ரவேல், மூன்றும் உலக நாடுகளிடையே யுத்தத்தை ஏற்படுத்தி ஆயுத விற்பனையைப் பெருக்கவே முயற்சிக்கிறது இதற்கு நாம் பலியாகக் கூடாது.

இப்படி திரு தொடங்கொட சொன்னார். (இ-எ)

## முஸ்லிம்---

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)
பகுதிகள் எல்லாம் இணைக்கப்பட்டு முஸ்லிம் மாகாணசபை அமைக்கப்படவேண்டும்.

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் பற்றிப்பேச அமைச்சர் முகமதுவுக்கு உரிமை கிடையாது. சிங்களவர்களினால் தெரிவு செய்யப்பட்டவர் அமைச்சர் முகம்மது அவர் எப்படி முஸ்லிம்களுக்காகப் பேசமுடியும்?

இப்படி அல்ஹாஜ்மஹ்மூத் சொன்னார். (இ-எ)

## இந்திய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
களுடனும் பேச்சுக்களை நடத்தியது.

இதற்கு இலங்கை அரசு இணங்க மறுத்து விட்டதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன

இணை அமைச்சர்கள் நட்வர்சிங், பா. சிதம்பரம் ஆகியோர் கொண்ட இந்தியக்குழு திங்கள் கொழும்பு வந்து ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடத்திவிட்டு புதுடில்லி திரும்பியது (அ-எ)

## அறிவித்தல்

மேர்சன்ற் பினான்ஸ் லிமிட்டெட்
கொன்சல்டன்சி & பினான்ஸ் &
டெவெலப்மென்ட் லிமிட்டெட்.
நவீன சந்தை — யாழ்ப்பாணம்

தற்போதைய நிலையில் எமது காரியாலயம் எங்கள் களஞ்சியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

விலாசம்:
மேர்சன்ற் பினான்ஸ் லிமிட்டெட்
களஞ்சியம்
555, நாவலர் வீதி,
(கைலாசபிள்ளையார் கோவில் மேற்கு வீதியடி.)
யாழ்ப்பாணம்.

யோ. முருகேசு
(காரியதரிசி)

26-11-86

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி: 26 - 11 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power-House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ 60/N 96